"திருவள்ளுவர்" ஆண்டு 6311 ☆ தேன்மொழி! 551331 ☆ ஆனந்த! 1958 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் கோக்கு

ஆண்டு: 20] சென்னை: கார்த்திகை 12 (27—11—72) திங்கள் கிழமை: கார்த்திகை 13 (28—11—72) செவ்வாய் [இதழ்: 136

வேளாண்மை வளர்ச்சிக்குத் தனி அமைப்பு

திருச்சி, நவ. 27— தமிழ்நாட்டில் அதிகரம் மற்ற பிறதார்களைக் கொண்டு வேளாண்மை வளர்ச்சி அமைப்பு ஒன்றை நிறுவ எண்ணியிருப்பதாக வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கூறினார். வேளாண்மைத் துறையைச் சீரமைக்க அரசு எண்ணியிருப்பதாகவும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அரசாங்க டிப்போக்கள் மூலம் இரசாயன உரங்களை வழங்குவதற்காக விவசாயிகளுக்கு வங்கிக் கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

புரட்சியாரின் புதிய 'டமாஷ்'

சென்னை, நவ. 27—

புத்தம் புதிய போராட்டத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டுக்கு அறிவித்துள்ளார் புரட்சியார்!

இந்திய அரசியல் வரலாறே கண்டறியாத புதிய போராட்டம் இது! மகாத்மா காந்தியின் மூளையில்கூட உதிக்காத புரட்சிகரமான போராட்டம்!

இதுவரை நடத்திய போராட்டங்களெல்லாம் 'பிசுபிசு'த்தது போல் இந்தப் போராட்டம் 'பிசுபிசு'க்காது!

இந்தப் புதிய போராட்டம் மட்டும் நடத்தவிட்டால் அதன் பிறகு போராட்டத்துக்கே தேவையிருக்காது! அத்தோடு ஒழிந்தது தி.மு.க. ஆட்சி!

எனவே, புரட்சியார் நடத்த இருக்கும் இந்தப் போராட்டம் தான் அவருடைய கடசியின் இறுதிப் போராட்டமாகவும் இருக்கும்! ஏதோ 'டமாஷ்'க்குச் சொல்வதாக நினைக்க வேண்டாம்—உள்ளபடியே அரசியலில் இது ஒரு புதிய 'டமாஷ்'தான்! 'இல்லே' என்று எந்த அரசியல்வாதியாவது கூறட்டும் பார்க்கலாம்!

எல்லா அரசியல் வாதிகளும், 'அரசை எதிர்த்தும் போராட்டம்' என்றால், அரசாங்க அலுவலகம் முன்னே—அமைச்சர்கள் வீட்டு முன்போதான் நடத்துவார்கள்; இல்லையென்றால் பொது இடங்களில் நடத்துவார்கள்!

ஆனால் நமது புரட்சியாரோ, அரசாங்க அலுவலகம் பக்கமே போகாமல் போராட்டம் நடத்தப்போகிறார்!

ஒவ்வொரு பேலீசு அதிகாரி வீட்டு அடுப்பங்கரையும் போராட்டக் களமாக மாறப்போகிறது! ஆம்—உண்மைதான்!

குடியரசுத் தலைவரிடம் ஆரம்பித்து—சட்டமன்ற உறுப்பினர் வரை மனுக் கொடுத்துப் பார்த்தாகிவிட்டது; அதனால் ஒன்றும் ஆகவில்லை; வேறு என்ன செய்வது? ஒர் அரசியல் தலைவர் என்ன வர் இதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

என்றாலும் விடவில்லை—புதிய அரசியல் கதாநாயகரான புரட்சியார்! மாநில எதிர்பார்த்திராதவண்ணம் அதிகாரிகள் வீட்டு அடுப்பங்கரை நோக்கிப் பேரணி நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

நாட்டில் இப்போது எங்கும் அடக்குமுறை நடமாடுகிறது என்று சொல்லப்படுகிறது அல்லவா? இந்த அடக்குமுறையை நிறுத்த வழி என்ன?

'மயிலே—மயிலே' என்றால் இறகு போடுமா? மகஜர்—மனு என்றெல்லாம் மக்திரிகளிடமும், அதிகாரிகளிடமும் கொடுத்துக் கொண்டிருந்தால் என்ன பலன்? அதனால்தான், 'வீண்டிரசி' களான அதிகாரிகளின் மனவிமரர்களிடமே நேரில் சென்று மனுக் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டார்—இந்தப் புதுமை அரசியல் வித்தகர்!

எனவே, புரட்சியாரின் கம்சித் தொண்டர்களே—அண்டர் கிரவுண்டுக் வட்சி வீரர்களே—ஆயத்தமாகுங்கள் அடுத்த போராட்டத்துக்கு!

நீங்கள் போலீசு அதிகாரிகள் வீட்டுக்கு முன்பக்கமாகக் கூடச் செல்லத் தேவையில்லை. முன்புறத்தில் உங்கள் எதிரிகளான 'அதிகாரிகளே' நந்தி மாதிரி இருந்துகொண்டு உங்களுக்கு வழிவிடமாட்டார்கள்; எனவே, அதிகாரிகள் வீட்டுப் புழக்கடை நோக்கி நடக்கத்தும் உங்கள் அணிவகுப்பு! அடுப்பங்கரையில் அமர்ந்து 'ஆட்சி' நடத்தும் அரசியாரிடம் அளியுங்கள் உங்கள் மகஜரை!

ஆனால் ஒன்று—நீங்கள் எல்லாவற்றிற்கும் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாகவே செல்ல வேண்டும்.

போர்க்களத்தில் இல்லாத ஆயுதங்கள்கூட அடுப்பங்கரையில் இருக்கும்; அங்கு அரிவாள் இல்லாவிட்டாலும் 'அரிவாள் மனை' இருக்கும்; கத்தி கப்பாரி இருக்காது; ஆனால், கரண்டி—அகப்பைகள் ஏராளமாக இருக்கும்!

கண்ணீர்ப் புகையைவிடப் பலமாக வேலைசெய்யும் மிளகாய்ப் பொடி—டப்பியையாக அடுக்கி வைத்திருப்பார்கள்! கொப்பரை புண்டு—அதில் கொதிக்கும் நீரும் உண்டு.

அடுப்புக்கும் மக்கத்தில் தடுப்பும் இருக்கும்—துடைப்பமும் இருக்கும்—இன்னும் எத்தனை எத்தனையோவிதமான ஆயுதங்கள் அடங்கிய 'களம்'தான் வீட்டரசியார் ஆட்சி செய்யும் இடம்!

அந்தந்த வீட்டரசியாரின் மனப்போக்கிற்கேற்ப உங்களுக்கு வரவேற்போ—உசரிப்போ அமையும்; எனவே, நீங்கள் எதற்கும் தயாராக—நல்லுருகே உரிய முறையில் முன்னெச்சரிக்கையாகவே செல்லுங்கள்! ஏதேனும் அசம்பாவிதங்கள் நடந்துவிட்டால், அதற்கு அந்த வீட்டுகாரரான பேலீசு அதிகாரி தொறும்பாகாமட்டார்! உங்களைப் பாதுகாக்கவும் அவர் ஒடிஒரு மாட்டார்! 'டமாஷ்'ப் பார்த்து ரசித்துக் கொண்டுதான் இருப்பார்!

அதன் பிறகு யாரிடம்போய் மனுக் கொடுப்பது?

—'சேனை'

புறப்பட்டது காண் வாக்காளர் 'பேர் அணி'

படைத்திட்டது கரண் நகைச்சுவை பெருவிருந்து!

சென்னை, நவ. 27—

'வாக்காளர் பேரணி' என்ற பெயரில் புரட்சியார் அறிவித்திருந்த போராட்டம் நேற்று சென்னையிலும்—வெளியூர்களிலும் 'சிரிப்பாய்ச் சிரித்தது'!

ஏதோ—ஆயிரக்கணக்கான வாக்காளப் பெருமக்கள், தங்கள் பிரதிநிதி வீடு நோக்கிப் படை திரளப் போகிறார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர்!

கட்டுக்கடங்காத கூட்டம் கூடி—அதன் விளைவாக ஏதேனும் 'அமளிதுமளி' ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி—காவல் துறையினரும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்!

ஐம்பதாயிரம்—அறுபதாயிரம்—ஒரு இலட்சம் என்ற அளவில் வாக்காளர்களைக் கொண்ட ஒவ்வொரு தொகுதியிலும், என்னதான் குறைத்து மதிப்பிட்டாலும் ஒரு பத்தாயிரம்—இருபதாயிரம் பேராவது தேறமாட்டார்களா என்று போலீசார் கணக்குப் போட்டிருக்கக்கூடும்; எனவேதான், ஒவ்வொரு தொகுதியிலும் லாரி நிறையப் போலீசாரை ஏற்றிகொண்டு, பேரணி புறப்படும் இடத்தில் முன்னதாகவே காத்திருந்தனர்—பேரணிக்குப் பாதுகாப்பு அளிக்க!

சென்னை நகரில் எந்தத் தொகுதியிலும் குறிப்பிட்ட நேரத்தில் பேரணி புறப்பட வில்லை; காலை 9-மணி என்று போட்டிருந்தும், 10 மணி—11 மணி என்று நேரம் ஆயிற்று! எப்படியோ புறப்பட்டது—பேர் அணி'!

ஆயிரக்கணக்கில் என்று கூடச் சொல்லவேண்டாம்—நூற்றுக்கணக்கில் என்று வது சொல்லத்தக்க அளவில் இருக்க வேண்டாமா?

இருபது—முப்பது என்ற அளவிலா 'பேர் அணி' புறப்படுவது? !பரவாயில்லே' என்று மனதைத் தேற்றிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்!

'படை பெருத்ததோ—பார் சிறுத்ததோ' என்று இலக்கியத்திலே கூறுவார்களே—அதுபோல், போலீசு அணி பெருத்ததோ—பேரணி சிறுத்ததோ' என்ற அளவுக்குப் போலீசார் எண்ணிக்கையைவிடப் பேரணியில் இருந்தவர்கள் குறைவாக இருந்தார்கள்.

அப்படியென்றால் அவ்வளவு போலீசா? என்று வியக்கவேண்டாம்! ஒரு லாரியில் எத்தனைப் போலீசுக்காரர் இருக்க முடியுமோ அவ்வளவுதான்! சில இடங்களில் இரண்டு அல்லது மூன்று லாரி போலீசார்! இதிலிருந்து பேரணியில் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம்!

முதல்வர் கலைஞர் வீட்டுக்கு வந்த 'ரேணி' மற்றி 'முரசொலி' நிருபர் கண்ட காட்சியைப் படித்து ரசியுங்கள்:—

தமிழக முதல்வர் இல்லத்திற்கு இன்று வந்த வாக்காளர் அணி, குறிபிடப்பட்டபடி காலை 9 மணிக்கு புறப்பட இயலவில்லை; புறப்படும் இடத்தில் காலை 10 மணி வரை ஐபது பேருக்கு மேல் சேரவில்லை; பிறகு ஆட்கள் அங்குமிங்கும் ஊந்நாராக; 'கை மாறவேண்டியது' மாறின; வேறு தொகுதிகளிலிருந்தும் சிலரைப் பிடித்து அழைத்து வந்தனர்; பின்னர் கூடமும் சிறிது சேர்ந்தது—ஐந்நூற்றுக்கும் குறைவானவர்களே சேர்ந்தனர்—ஊர்வலம் புறப்படவது!

மதுவிலக்குக் கொள்கையை நிலைநிறுத்தும் புறப்படவருக்கும் தலைவர் அறிவித்த இந்தப் பேரணிக்குத் தலைமை தாங்கி வந்தவர், வழி முழுவதும் 'தள்ளாடி தள்ளாடி' நடந்து வந்தார்!

ஊர்வலம் லாயிட்ஸ் சாலையில் நின்றது; மகஜரை ஏந்தி ஊர்வலத் தலைமை ஏற்ற தியாகராயநகர் தொகுதியின் வாக்காளரும்—மற்றும் எஸ். ஜி. ஆரின் மாடிகார்டு ஒருவரும், வேறு முவரும் முதல்வர் இல்லை வந்தனர்; தலைவரின் கேடயை மறந்து அவர்கள், 'கருணாநிதி ஒழிக' என்று கோஷம் எழுப்பி வந்தனர்.

முதல்வர் வீட்டின் படிகளில் ஏறும்போது தலைமை ஏற்று வந்தவர் தள்ளாடித் தவறி விழுந்திருக்க நேர்ந்தது—அவருக்குத் துணையாக எஸ். ஜி. ஆரின் 'மாடிகார்டு' அவரைத் தூக்கில் பிடித்து அழைத்துச் சென்றார்!

பின்னர் முதன்மையாம் மகஜர் அளிக்கப்பட்டது; மனு அளித்தவுடன் முதல்வர், ஒரு எலுமிச்சம்பழம் அளித்தார்—பெற்றுக்கொண்டவர் விடைபெற்றுச் சென்றார்!

முதல்வரிடம் தந்த மனுவில், 'கருணாநிதி அரசை விலக்கச் சிரார்கேசய்யு சாது; கோரியிருந்தது நடைச்சுவையின் உச்சக கட்டமாகும்!

முதல்வர்—செய்தியாளர் சந்திப்பு

இதற்குப் பிறகு முதலமைச்சரை, செய்தியாளர்கள் சந்தித்தார்கள்: அவர்கள் கேட்ட வினுக்களும் அதற்கு முதலமைச்சர் அளித்த பதில் விவரமும் வருமாறு:—

செய்தியாளர்:—" என்ன சொன்னீர்கள்?"

முதல்வர்:—" மனுவைக் கொடுத்தார்கள்—வாங்கிக் கொண்டேன்; 5 மேர் மைமெமுத்தும் போட்டிருந்தார்கள்; 'கருணாநிதியை பிரசிடெண்டாக செய்யச் சொல்லவேண்டும்' என்று என்னிடமே சிலரிடம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். (அவர்கள் தந்த மனுவைச் செய்தியாளர்களிடமே படித்துப் பார்க்குமாறு கொடுக்கிறார்.) சுகோபன் என்னிடம் மனுவைத் தந்தார்; நான், அவருக்கு எலுமிச்சம் பழத்தைத் தந்தேன்."

முதல்வர்:—" எத்தனைப் பேர் ஊர்வலத்தில் வந்திருந்தார்கள்?"

செய்தியாளர்:—" 500 பேர்."

முதல்வர்:—" சைதாத் தொகுதியில் 63,000 பேர் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள்; திருவாரூரில் மேகேலே ஊர்வலத்தில் 500 பேர் வந்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள்; அதிலும் எத்தனைப் பேர் சைதாத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியாது."

செய்தியாளர்:—" தமிழ்நாட்டில் வேறு எங்காவது ஏதாவது அசம்பாவிதம் உண்டா?"

முதல்வர்:—" எங்கும் எவ்வித அசம்பாவிதமும் இல்லை."

எம். ஜி. ஆர். நிலைபற்றி பம்பாய் ஏடு மதிப்பீடு

'தெளிந்த அறிவில்லாதவர்--முன்யோசனை அற்றவர்'

[★]

'கம்யூனிஸ்டுகளால் வழிநடத்திச் செல்லப்படுகிருர்'

'பொருள[illegible] போராட்டத்தால் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை'

பம்பாய், நவ. 27—

" திரு. கருணாநிதி அரசு நீடித்திருப்பதை எதிர்த்து எம். ஜி. இராமச்சந்திரன் தொடங்கியிருக்கும் புதிய போராட்டம் மத்தியத் தலைமையின் அனுதாபத்தையோ அல்லது ஆதரவினையோ பெறமுடியவில்லை; ஆகவே, அவருடைய முயற்சி எந்தவித விளைவுகளையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை!

" எம்.ஜி.ஆர். தமது தி.மு.க. ஆட்சி எதிர்ப்புப் போராட்டத்திற்கு மத்திய அரசு துணைநிற்கும் என்று பெரிதும் நம்பினர்; ஆனுல் பரிதாபத்திற்குரிய வகையில் ஏமாந்து போய்விட்டார்கள்!

" எம்.ஜி.ஆர். கட்சி, அமைக்கப்பட்டவுடனேயே மறைந்து போயிருக்கும்; ஆனுல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தமிழ்நாட்டில் தனது பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்திருக்கிறது; அரசியல் தீர்க்க தரிசனமோ – பக்குவமோ – தெளிந்த அறிவோ எதுவுமில்லாத எம்.ஜி.ஆர் வலது கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரத்தினுல் வழிநடத்திச் செல்லப்படுகிருர்"

என்று பம்பாயிலிருந்து வெளிவரும் 'பீரிபிரஸ் ஜர்னல்' என்ற ஏடு, புரட்சியாரின் புதுக் கட்சி பற்றிக் கருத்தறிவிக்கையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறது; இதன் தொடர்பில் அந்தப் பத்திரிகை எழுதியிருப்பதாவது :—

" தமிழ்நாட்டு அரசியல் மிகுந்த வெப்பமாக இருந்தாலும் -- அண்மைக் காலத்து நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் எவரும் -- திரு. கருணாநிதி தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவை, அது தேர்ந்தெடுக்கப்பட்ட முழுமையான காலத்திற்கும்—அதாவது 1976 வரையில்—நிச்சயம் நீடித்திருக்கும் என்பதனைத் தெளிவாக உணருவர்.

மோகனுக்கு ஏற்பட்ட மனமாற்றம்

மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் சில மாதங்களுக்கு முன்பு—பாண்டிச்சேரி இடைத் தேர்தல் முடிந்தவுடன்—'தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவலால் கருணாநிதி அமைச்சரவை கவிழும்' என்று ஆருடம் கணித்தார்; ஆனுல், இதுபோன்ற குழப்பத்திற்கு வித்தூன்ற இந்திரா காந்தி இடந்தரவில்லை; ஆகவே, மோகன் குமாரமங்கலம் தனது போக்கை மாற்றிக் கொண்டுவிட்டார்; அவரே இப்பொழுது—ஒரு வாரத்திற்கு முன்பு—'சனநாயக அமைப்பில் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்றுள்ள ஒரு அரசாங்கத்தைச் சரியான காரணங்களின்றிக் கவிழ்த்திட முடியாது' என்று எச்சரிக்கையாகவும் பக்குவமாகவும் பேசியிருக்கிருர்.

கேலி செய்கிருரா எம். ஜி. ஆரை?

வெவ்வேறு இலட்சியங்களைக்கொண்ட இ. காங்கிரசுக் கட்சியும்—எம்.ஜி.ஆர். கட்சியும் எப்படி நெருங்கி உறவுகொள்ள முடியும் என்ற கேள்வியின் மூலம், காங்கிரசை நெருங்க முயன்றுகொண்டிருக்கும் எம்.ஜி.ஆரை மோகன் குமாரமங்கலம் கேலி செய்திருக்கிருர்.

இணங்கிடத் தவறினுல் எதிர்ப்பாம்!

" எம்.ஜி.ஆர். இன்னும் தனது கட்சியின் கொள்கைகளையும்—பொருளாதாரக் கோட்பாடுகளையும் தெளிவுபடுத்தவில்லை" என்றும் மோகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மதுரை மாநாட்டிலும்கூட எம்.ஜி.ஆர்., மத்திய அரசைக் கடுமையாக விமர்சித்தார்; இப்பொழுது, 'தி.மு.க. அமைச்சரவைமீது விசாரணை வேண்டும்' என்ற தனது கோரிக்கைக்கு இணங்கிடத் தவறினுல், மத்திய அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாக வேறு அச்சுறுத்தியுள்ளார்.

" எம்.ஜி.ஆர். கட்சி இரண்டாகப் பிரிந்து, ஒரு பிரிவு காங்கிரசுக் கட்சியுடனும்—மற்றென்று தி. மு. கழகத்துடனும் இணைந்துவிடும்" என்று காமராசர் கூறியுள்ளார்.

ஆளுநர் கருத்துக்கு டில்லியின் மதிப்பு

தமிழ்நாட்டுக் கவர்னர் கே. கே. ஷா, கருணாநிதி அமைச்சரவை நிலையானதாகுமென்றும், இப்போதோ--எதிர்காலத்திலோ அதற்குக் குந்தகம் ஏற்படுத்திடக்கூடாது என்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது; மத்தியத் தலைமை, கவர்னரின் கருத்துக்களை முழுமையாக ஒத்துக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

234 உறுப்பினர்கள்கொண்ட சட்டப் பேரவையில் 174 தி. மு. க. உறுப்பினர்கள்—6 முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் தவிர சுயேச்சை உறுப்பினர்கள் -- தமிழரசுக் கழகம் -- பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் கருணாநிதிக்குப் பக்கபலமாக உள்ளன; சட்டப் பேரவைத் தலைவரை விலக்கிட மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை; ஒருவேளை, 'சட்டப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தூக்கி எறியப்படுவோம்' என்ற அச்சத்தினலோ என்னவோ—மதியழகன் திடீரென சபையை டிசம்பர் 5-ந்தேதி வரை ஒத்திவைத்துவிட்டார் போலும்!

சட்டமன்றக் கூட்டத் தொடரை முடித்து வைத்ததன்மூலம் சரியான அரசியல் சட்ட நடைமுறையைக் கவர்னர் மேற்கொண்டிருக்கிருர்.

சரிவு இல்லை என்பதற்கு சரியான சான்று

தி. மு. கழகத்தில் பிளவு ஏற்பட்டதற்குப்பின், முதல் பலப் பரிசோதனை சென்னை மாநகராட்சி மேயர் தேர்தலில் மேற்கொள்ளப்பட்டது; கழக வேட்பாளர் தி. மு. க. குழு அல்லாத கட்சிகளின் வாக்குகளையும் பெற்று மிகப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றர்.

தி. மு. க. வேட்பாளர் 17 அதிக வாக்குகளுடன் -- 74 வாக்குகள் பெற்று வென்ருர்; இந்தத் தேர்தல், கழகத்தில் சரிவு இல்லை என்பதற்கும், பழைய காங்கிரசு மட்டுமே தி. மு. கழகத்தின் எதிர்க் கட்சி என்பதற்கும் சரியான சான்ருகும்.

கம்யூனிஸ்டு வலையில் வீழ்ந்த விசித்திரம்

முன்யோசனை ஏதுமின்றி எம். ஜி. ஆர். கம்யூனிஸ்டு வலையில் வீழ்ந்துவிட்டார்; இம்மாதத் தொடக்கத்தில் சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்திற்கு ஏற்பாடுகள் செய்து உதவியவர் கல்யாணசுந்தரம்தான். அவர்தான் எம். ஜி. ஆரை டெல்லிக்கு அழைத்துச் சென்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரியிடம் மனு கொடுக்கச் செய்தார்; கல்யாணசுந்தரம், மத்தியிலுள்ள தலைவர்களை டெல்லியில் தனித்தனியே சந்தித்திருக்கிருர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த நேரத்தில் வலது கம்யூனிஸ்டுகள் முன்னுக்கு வந்தது, எம். ஜி. ஆரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது; மேலும் எம். ஜி. ஆருக்குள்ள சொந்தச் செல்வாக்கினை கல்யாணசுந்தரமும் -- அவரைச் சார்ந்தவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் தற்போது எம். ஜி. ஆருக்குக் கொடுக்கும் ஆதரவு ஒன்றும் ஆச்சரியத்திற்கு உரியதில்லை; இடது கம்யூனிஸ்டுத் தலைவர் ஏ. கே. கோபாலன் குறிப்பிட்டுள்ளபடி, வலது கம்யூனிஸ்டுகளின் நோக்கம், ஊழலுக்கு எதிராகக் கொள்கை ரீதியான -- முறைப்படுத்தப்பட்ட எதிர்ப்பினைக் கொடுப்பதல்ல; எம். ஜி. ஆர். கட்சியை இ. காங்கிரசுடன் உறவு கொள்ளச் செய்வதேயாகும்.

இப்பொழுது இ. காங்கிரசு நடுநிலை வகித்து வருகிறது; கம்யூனிஸ்டுகள் எம். ஜி. ஆரின் போராட்ட அணுகு முறைகளின் மூலம் பயனடைய முயற்சித்து வருகிருர்கள்!

இக்கட்டான நிலையில் எம். ஜி. இராமச்சந்திரன்

இக்கட்டான நிலையில் எம். ஜி. ஆர். இருக்கிருர். தி. மு. கழக அரசுக்கு எதிராக அவர் கூறும் ஊழல் குற்றச்சாட்டுகளைத் தமிழ்நாட்டு மக்கள் பெரிதுபடுத்தப் போவதில்லை; காரணம், இதே எம். ஜி. யார்தான் மூன்று மாதங்களுக்கு முன்பு தி. மு. க. மாநாடு ஒன்றில், '1976 தேர்தலுக்குமுன் சனநாயக ரீதியாக முறையாக அமைக்கப்பட்ட தி. மு. க. அரசைக் கவிழ்த்திட மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் பொருளற்றது' என்று பேசியிருக்கிருர்.

முதலமைச்சர் கூறுவதில் நியாயம் இருக்கிறது

இந்த மாதிரியான சூழ்நிலைகளில், இப்போது கருணாநிதி அமைச்சரவைக்கு எந்தவித ஆபத்தும் கிடையாது; மத்தியத் தலைமை எச்சரிக்கையாக இருக்கிறது; காமராசர் பொறுமையாக இருக்கிருர்; கட்சியை கருணாநிதி முழுமையாகப் பாதுகாத்திருக்கிருர்; சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்கிருர்; 'அலைகளும் காற்றும், திறமைமிக்க கப்பலோட்டிக்கே உதவியாக இருக்கும்' என்று முதல்வர் கருணாநிதி கூறுவதில் நியாயம் இருக்கிறது.

கட்டுப்பாடு காத்தனர் கழக உறுப்பினர்கள்

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற -- பேரவைத் தலைவரால் திடீரென ஒத்திவைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டத்தில் திரு. கருணாநிதி கட்டுப்பாடான முறையில் தமது கட்சிக்காரர்களை வைத்திருந்தார்.

தி. மு. கழக அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எம். ஜி. ஆரும்-- பிறரும் வீசியபோது, தி. மு. க. உறுப்பினர்கள் உணர்ச்சியோடும், கோபத்தோடும் பதிலுரைக்க எழுந்தனர்; ஆனுல் திரு. கருணாநிதி, தமது உறுப்பினர்கள் தங்கள் இடத்திலிருந்து எழுந்திருக்க வேண்டாம் எனச் சைகை காட்டினுர்; அவரது உறுப்பினர்கள் அமைதியாயினர். அவர்கள் பொறுமையாயிருந்து சபையின் கவுரவத்தைக் காத்தனர்."

(8-ம் பத்தியின் தொடர்ச்சி)

" சட்டமன்றங்களின் நடைமுறைகளைப் பற்றிய வரலாற்றில் ஒரு 'மைல் கல்'' என்று சொல்லத்தக்க அளவுக்கு, அப்பீலின்மீது சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பு அமைந்தது!

" பஞ்சாப் சட்டமன்றம் கூடி நிதி பற்றி எடுத்த சட்ட முடிவுகள் செல்லுபடியாகும்" என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்ததுடன் சபாநாயகரின் கடமைகளைப் பற்றியும் விளக்கியது; அது வருமாறு :—

1. ஒரு சட்டமன்றம் இன்னின்ன தேதிகளில் கூடிடலாமா கூடாதா என்பது பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருடையது அல்ல!
2. தம்மை எந்தச் சட்டம் கட்டுப்படுத்துகிறதோ அந்தச் சட்டத்தை எதிர்த்தே சபாநாயகர் நடந்துகொண்டிருக்கிருர்; சட்டமன்றம் கூடி நிறைவேற்றுகின்ற எந்த ஒரு சட்டமும் அந்த அவை[illegible]மை உறுப்பினர்களால் நிராகரிக்கப்படாத வ[illegible] செல்லுபடியாகும்.

ஒரு சட்டமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் அதன் கூட்டத் தொடரையே ரத்து செய்து, 'ஆளுநர் இட்ட உத்தரவு செல்லுமா' என்ற கேள்விக்கு விடையளித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், 'ஆளுநரின் அந்த உத்தரவுக்குப் பின்னுல் எவ்வித கெட்ட நோக்கமும் இல்லை' என்று தீர்ப்புக் கூறினர்.

ஒரு சபாநாயகர் சனநாயக மரபுகளுக்கு ஏற்ப நடந்திட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியும், சட்டமன்றங்கள் இயல்பாக நடைபெற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தும் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீர்ப்பு அளித்ததை, 'சட்டமன்றங்கள் சீராக நடைபெற வேண்டும்' என்பதில் அக்கறையுடைய அனைவரும் வரவேற்றனர்.

அடுத்த சில நாட்களுக்கெல்லாம் திருவனந்தபுரத்தில் அவைத் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது; நாடாளுமன்ற அவைத் தலைவராக இருந்த சஞ்சீவ ரெட்டி அப்போது பேசியபோது, 'பஞ்சாப் சபாநாயகரின் நடத்தை மிகவும் துரதிருஷ்டமானது' என்ருர்; 'இவ்வாறு நடந்ததன் மூலம் அவைத் தலைவர் பதவிக்கும் -- நாட்டுக்கும் பஞ்சாப் சபாநாயகர் இழிவு தேடிவிட்டார்' என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அவைத்தலைவரின் செயலைப் பற்றியும் மக்களிடையே இதே கருத்துதான் நிலவுகிறது; திரு. கருணாநிதிக்கு போதுமான பெரும்பான்மை இருக்கிறது என்பதற்குச் சான்றுகள் பல உண்டு; சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவைத்தலைவர்மீது நம்பிக்கையில்லை என்பதை 178 எம்.எல்.ஏ.-க்கள் கூடி தெரிவித்தனர்; மதியழகன் நேர்மையான முறையில் பதவியை விட்டு இறங்கியிருக்கவேண்டும்; போதுமான முன்னறிவிப்புக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றியோ, ஒரு சபாநாயகரைக் கண்டித்துத் தீர்மானம் போடலாமா கூடாதா என்பது பற்றியோ விரிவாக இங்கு வாதாடிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

சனநாயக வழி முறைகளைப் பார்த்தாலே, பதவியிலிருந்து மதியழகன், நேர்மையாக விலகியிருக்கவேண்டும்.

அவையை ஒத்திவைத்ததன் மூலம், தவிர்க்க முடியாத முடிவைச் சில காலத்துக்கு மட்டுமே அவர் தள்ளி வைத்திருக்கிருர் எனலாம்.

ஒன்பது பேரை மட்டுமே கொண்டுள்ள எம். ஜி இராமச்சந்திரன் கட்சியில், டிசம்பர் 6-ஆம் தேதிக்குள் பலர்வந்து சேர்ந்திடுவார்கள் -- பிறகு நம்மையே ஆட்சியில் அமர்த்துவார்கள் -- என்று மதியழகன் நம்பியிருப்பார் என்று எண்ணத் தோன்றவில்லை.

'காலந்தாழ்த்திக் காரியங்களைச் செய்துகொள்ளலாம்' என்ற அரசியல் விளையாட்டுகளுக்கு இடமளிக்காமல் சட்டமன்றக் கூட்டத் தொடரை உடனடியாக ஆளுநர் கே. கே. ஷா கலைத்திருக்கிருர்; அவசியமானுல் மீண்டும் டிசம்பர் 6-ந் தேதிக்கு மின்னுல் அவையைக் கூட்டுவதுபற்றி அரசியல் சட்ட வல்லுநர்களை அவர் கலந்தாலோசிக்கக்கூடும்; அன்றியும், மத்திய அரசின் ஆலோசனையையும் அவர் அண்மையில் டில்லிக்கு வரும்போது பெறக்கூடும்.

தமிழ்நாட்டுக்கும் -- பஞ்சாபுக்கும் இடையே வேறுபாடு இருக்குமானுல், அது, 'தமிழக சட்டமன்றத்தின்முன் அவசரசத் தன்மையோடு கூடிய அலுவல் எதுவும் இல்லை' என்பதுதான்; ஆயினும், 'எது அவசரம் -- எது அவசரமில்லை' என்று தீர்மானிப்பது அவைத்தலைவரின் வேலை அல்ல!

சட்டமன்றம் மீண்டும் கூட்டப்படுகின்றபோது, அதன்முன் துணை மான்யக் கோரிக்கைகளை கொண்டுவர இருக்கிருர் முதலமைச்சர் சுப்ரீம் கோர்ட் அளித்துள்ள தீர்ப்பின்படி -- புதிய கூட்டத் தொடரின் அலுவல்கள் அனைத்தையும் இந்த துணை மான்யக் கோரிக்கையைக் கொண்டுவரும் செயலானது செல்லுபடியாகும் என்பதோடு, சபாநாயகரைப் பதவியிலிருந்து விலக்க ஒரு வாய்ப்பும் அப்போது ஏற்படும்."

அர்த்தாலும் 'பந்த்'தும் கழக வலிமை அசைக்கவில்லை

[★]

எம். ஜி. ஆர். எண்ணம் ஈடேருத நிலை

ஏமாற்றத்தால் எரிச்சல்---டில்லி மீது பாய்ச்சல்

அரசியலில் அநாதையாகும் அபாயகரமான மாற்றம்

" திரு. இராமச்சந்திரன் தெருக்களிலே நடத்திக் காட்டிய காட்சிகளும் -- அர்த்தால்களும் 'பந்து'களும், தி. மு. கழகத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் உருவாக்கிடவில்லை!

" புதுடில்லியிடம் இராமச்சந்திரன் கொண்டுள்ள எரிச்சலைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை; எப்படியும் -- எதைச் செய்தாவது கருணாநிதி அரசைப் பதவியிலிருந்து இறக்கிவிட வேண்டுமென்பது அவரது நோக்கமாகும்!

" கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையின் முழு ஆதரவும் -- தவழும் நிலையில் உள்ள தன் கட்சிக்குக் கிடைத்துள்ளது என்பதால் -- டில்லியின் 'ஆசீர்வாத'த்துடன் தன் எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையை அவர்கள் பெற்றிருக்கிருர்கள்; ஆனுல், அவர்கள் கொடுத்த புகார் மனுவை திரு. கருணாநிதிக்கே அனுப்பிவிடுவது என்று தலைமையமைச்சர் எடுத்த முடிவானது, இவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையே அளித்திருப்பதாகத் தெரிகிறது !!

என்று, 'அபாயகரமான திசை மாற்றம்' என்ற தலைப்பில், டில்லியிலிருந்து வெளியாகும் 'ஸ்டேட்ஸ்மன்' ஏடு, 22—11—72-ம் நாள் இதழில் தீட்டியுள்ள தலையங்கத்தில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறது; அத்தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

" சென்னையில் நடந்த தம் கட்சியின் ஆர்ப்பாட்டமும், நவம்பர் பத்தாம் தேதி தமிழ்நாட்டில் நடந்த அர்த்தாலும் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு டில்லியையும் அச்சுறுத்தும் அளவுக்கு ஊக்கமளித்திருப்பதாகத் தெரிகிறது.

செய்யாறு கூட்டத்தில் பேசிய அவர், 'டில்லியானது திரு. கருணாநிதி அமைச்சரவை மீது சாட்டப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க கமிஷன் நியமிப்பதில் தாமதம் காட்டுமானுல், என்னுடைய போராட்டம் டில்லியை நோக்கித் திரும்பும்' என்று கூறியிருக்கிருர்.

மாநில சுயாட்சிக் கோரிக்கையில் தாம் உண்மையிலேயே அக்கறையுடையவரே என்பதை வெளிக்காட்டிட முயன்ற எம். ஜி. இராமச்சந்திரன், குடியரசுத் தலைவரிடம் தாம் கொடுத்த புகார் மனுவின் மீது -- தாம் எதிர்பார்த்தபடி விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்து -- தமக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிருர்.

குடியரசுத் தலைவரிடத்தில் மனுவைக் கொடுத்த பின்னர், ஒன்றை இவர் ஒப்புக்கொண்டார்; 'குடியரசுத் தலைவரிடம் கொடுத்த மனுமீது அவர் என்ன செய்யவேண்டுமென்று கூறிக் காலக்கெடு போடுவது முறையானதல்ல' என்று அவரே கூறினர்; இப்போது அவர் பொறுமையை இழந்துவிட்டாரென்று தெரிகிறது.

இதற்கு ஒரு காரணம் -- தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியையொட்டிக் காங்கிரசுக் கட்சி கட்டி காத்துவரும் அணுகுமுறையாகும்.

தமிழ்நாட்டில் நிலைமையில் மத்தியத் தலையிடு கூடாது என்றும் -- தமிழ்நாட்டு நிலைமை முழுக்க முழுக்க ஒரு கட்சியின் உள்விவகாரம் என்றும் -- எனவே, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை அரசியல் திரிபோடு காணப்பட்டாலும் உண்மையில் சில தனி மனிதர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியே என்பதால் தலையீட்டுக்கு இடமில்லாமல் அமைதியாக இருக்க வேண்டுமென்றும் மத்தியில் இருப்போர் விவேகத்துடன் தீர்மானித்தனர்.

எம். ஜி. இராமச்சந்திரனின் பொறுமையின்மைக்கு மற்றொரு காரணம் -- தி. மு. கழக வேட்பாளரான ஆர். ஆறுமுகம் சென்னை மாநகரத் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும்; கணிசமான எண்ணிக்கையில் கவுன்சிலர்கள் தம் பக்கத்துக்கு வந்துவிட்டதாக எம். ஜி. இராமச்சந்திரன் கூறிக்கொண்ட பின்னரும் இப்படி நிகழ்ந்திருக்கிறது; தி. மு. கழகம் தமிழகத் தலைநகரான சென்னையில் முன்னைக்காட்டிலும் வலிவோடு தன்னை உறுதிபடுத்திக் கொண்டுள்ளது; பத்துக்கும் குறைவான எம்.எல்.ஏ.-க்களே அவர் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

அத்தனை 'அரசியல் [illegible]திரம் அறிந்தவர்' என்று சொல்ல முடியாத திரு. இராமச்சந்தி[illegible], வரிகொடா இயக்கம் உட்பட ஒரு பொதுக் கிளர்ச்சியை உ[illegible]விடும் பணியிலும் ஈடுபட்டிருக்கிருர்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் பெரும் பெரும்பான்மையோடிருக்கும் ஓர் அரசுக்கு எதிராக நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு எடுக்கத் தவறினுல் விரும்பத்தகாத விளைவுகளைச் மத்திய அரசு சந்திக்க நேரிடும் என்றும் கூறுவது, நாடாளுமன்ற சனநாயகத்துக்கே இடப்பட்டுள்ள அறைகூவலாகும்.

இந்தச் சூழ்நிலையில் திரு, சி. இராசகோபாலாச்சாரியின் முழு ஆதரவு இவர்களுக்கு இருக்கிறது என்பது, தொடர்போ -- பொருத்தமோ அற்றதே ஆகும்.

ஒரு நடிகர் என்ற முறையில் திரு. இராமச்சந்திரன் பிரபலமானவர் என்பதில் சந்தேகமில்லை; ஆனுல், அரசியலில் அவர் தீண்டுவாரற்று ஒதுக்கப்படுகிற அபாய நிலையில் இருக்கிருர்!

எம். ஜி. ஆருக்குத் தி. மு. க. எம்.எல்.ஏ.-க்களிடம் மிகக் குறைந்த ஆதரவே கிடைத்தது; அத்துடன், 'எம். ஜி. ஆர். நாடக'த்துக்கு ஸ்தாபன காங்கிரசு -- மார்க்சிஸ்டு -- சுதந்தரா ஆகிய கட்சிகள் ஆதரவளிக்க மறுத்துவிட்டன.

இது ஒரு கட்சியின் உள்விவகாரம் என்றாலும், மத்திய அரசு தலையிடாமல் அக்கறையில்லா பார்வையாளராக சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சட்டம் -- ஒழுங்கைக் காக்கச் சில போலீசு அணிகளை மத்தியிலிருந்து உதவி அக்கறை காட்டியுள்ள மத்திய அரசு, தமிழ்நாட்டில் நாடாளுமன்ற சனநாயகத்தைப் பாதுகாப்பதில் அத்தனை அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

எம். ஜி. ஆர். கட்சிக்குப் பின்னல் புது காங்கிரசு மறைந்திருக்கிறது -- என்று ஸ்தாபன காங்கிரசு கூறிவரும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வேண்டுமானுல், புதுடில்லியின் நடுநிலைமை பயன்படலாம்; ஆனுல், அவர்களது நடுநிலையானது, தமிழ்நாட்டில் நாடாளுமன்ற சனநாயகம் குலைந்துவிடும் அளவுக்கு அனுமதிப்பதாக இருக்குமானுல், அந்தக் குற்றச்சாட்டும் மெய்யென்று ஆகிவிடும்!"

மதியழகன் சுயநலப்போக்கு

[★]

'சட்டமன்றத்தை ஒத்திவைக்க நியாயமான காரணம் என்ன--பதவியில் தொடர்ந்து நீடிக்கக் கையாண்ட தந்திரமே'

'ஆளும் கட்சியில் பிளவு என்பதோ, ஊர்வலம்--அர்த்தால் போன்றவையோ சபாநாயகர் கவனிக்க வேண்டிய பிரச்சினைகள் அல்ல; அவரது கவலையெல்லாம், சட்டமன்றத்திற்குள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும்.

"கட்சிகளுக்கிடையே வேறுபாடு இருக்குமாயின், ஓட்டெடுப்பின் மூலம் முடிவு காணவேண்டியதே அவரது வேலை; ஆனுல் மதியழகனே, திரு. கருணாநிதியை முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்கிடவும், அதே நேரத்தில் தன்னிச்சையான போக்கின்மூலம் தாம் தொடர்ந்து சபாநாயகராக வீற்றிருக்கவும் சட்டமன்றத்தையே ஒத்திவைத்திருக்கிருர்''

என்று புதுடில்லியிலிருந்து வெளியாகும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' 20-11-72 இதழில் கருத்தறிவித்துள்ளது; அந்த ஏட்டில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

" ஒருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே கட்சி சார்பின்றி -- அரசியலுக்கு அப்பாற்பட்டவராக ஆகிவிடுகிருர் என்று பலராலும் நம்பப்படுகிறதென்ருலும், 'ஒரு சபாநாயகரானவர் அரசியல்வாதியே அல்லர்' என்று கூற முடியாது.

இந்தியாவில் சபாநாயகர்களது கடமைகள் -- மரபுகள் ஆகியவை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலிருந்து எடுத்து கையாளப்பட்டு வருகின்றன; என்ருலும் அவை இன்றும் எல்லோராலும் புரிந்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை; இயல்புக்கு மாருக ஏதேனும் நடக்கும்போது அனைவரது கவனமும், 'சபாநாயகரின் நியாயமான கடமைகள் என்ன' என்பது பற்றித் திருப்பப்படுகின்றது.

அப்படித் தடம் புரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றபோதெல்லாம், நீதிமன்றங்களும்--சபாநாயகர்களும் கூறியது என்ன? -- 'ஒரு சபாநாயகர், அவையைச் சரிவர நடத்திடக் கடமைப்பட்டிருக்கிருர்! ஆனுல் ஓர் அரசு நிலையானதுதானு -- போதிய நிலைத்தன்மை உள்ளதுதானு என்பது பற்றி அவர் தீர்ப்பு அளிக்கக்கூடாது; ஓர் அரசு பலம் உள்ளதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கப்படக்கூடிய இடம் சட்டமன்றமே' என்று அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

அமைச்சரவையிலிருந்து தம்மை அகற்றியதற்காகக் குறைபட்டிருந்த திரு. மதியழகன் -- தன்னை சபாநாயகர் ஆக்கியதன்மூலம் -- 'திரு. கருணாநிதி அரசியலில் தன்னை இயங்கா சக்தியாக ஆக்கிட முயலகிருர்' என்ற ஓர் எண்ணத்தையும் மனத்தில் வளர்த்துக் கொண்டிருந்தார்.

தி. மு. கழகத்துக்குச் சோதனை ஏற்பட்ட நேரத்தில், கவர்னரால் கூட்டப்பட்ட சட்டமன்றத்தைத் திடீரென்று ஒரு மாத காலத்துக்கு ஒத்திவைத்ததன் மூலம், அரசியலில் தமது கைங்கர்யத்தை நிறைவேற்றிட அவர் முனைந்திருக்கிருர்!

முதலமைச்சரின் ஆலோசனையின்மீது கவர்னர், சட்டமன்றக் கூட்டத் தொடரைக் [illegible]லைத்திருக்கிருர்; கவர்னரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து [illegible]யர் நீதிமன்றத்தில் சபாநாயகரும் -- எம். ஜி. இராமச்சந்திரனும் [illegible]ழக்குத் தொடுத்தனர்; ஆகவே அதை இங்கு நாம் விவாதி[illegible] விரும்பவில்லை.

தமிழ்நாட்டில் நடந்துள்[illegible] -- இயல்பு மீறிய நிகழ்ச்சியில் முக்கியத்துவமுள்ளது என்னவென்ருல், தம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்திருந்த நேரத்தில் அவையைத் திடீரென்று சபாநாயகர் ஒத்திவைத்தார் என்பதும், பிளவு ஏற்பட்டவுடனே சட்டமன்றத்தைக் கூட்டி அரசின் பலத்தைத் தெளிவாக்கிட முதலமைச்சர் முடிவெடுத்தார் என்பதுமே ஆகும்.

தமிழ்நாட்டு நிலைமை பற்றிய கருத்துக்களை வெளியிட்டோர், இதற்கும்—1968ல் மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சரவை பதவியிலிருந்து விலக்கப்பட்ட நேரத்தில் அம்மாநிலச் சட்டமன்றத்தில் நிகழ்ந்தவற்றையும் இணை காட்டி ஒப்பிட முனைந்துள்ளனர்; ஆனுல், பஞ்சாப் மாநிலச் சட்டமன்ற நிகழ்ச்சி பற்றிய 1968-ம் ஆண்டின் உட்கதையே இதற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

நிம்மதியற்ற கிளர்ச்சியின் [illegible]ழ்நிலையில்—காலித்தனமும் கோபமும் நிரம்பிய நிலையில் சட்ட[illegible]ன்றத்தை நடத்திச் செல்ல இயலாதென்று கூறி, 1968 மார்ச் 7-ந் தேதியன்று ஜோகீந்தர் சிங் மான், பஞ்சாப் சட்டமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்தார்; அந்நேரத்தில், 'அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரச் சட்டத்தில் இடமில்லை' என்றும், 'அரசியல் சட்டப்படி ஒரு சபாநாயகரைப் பதவியிலிருந்து அகற்றலாமே தவிர அவருக்குக் கண்டனம் தெரிவிக்க முடியாது' என்றும் அவர் கூறினுர்; 'சபாநாயகர், எதிர்க் கட்சியினருடன் சேர்ந்து கொண்டு சட்டமன்றத்தையே குழப்பம் மிகுந்த இடமாக்கிவிட்டார்' என்று பஞ்சாப் சட்டமன்ற காங்கிரசுக் கட்சி கண்டனம் தெரிவித்திருந்தது.

தமிழ்நாட்டைப் போலவே அன்று பஞ்சாபிலும், கவர்னராக இருந்த டாக்டர் டி. சி. பவாட்டே, மார்ச் 12-ந் தேதியன்று சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்து உத்தரவிட்டதுடன், மாநில நிதி விவகாரங்களைப் பற்றிய அவசர அலுவல்களைக் கவனிக்கச் சட்டமன்றக் கூட்டத்தை மீண்டும் கூட்டினுர்; 'மாநில அரசின் நிதி சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனித்து முடிவு செய்யும்வரையில், யாரும் அவைக் கூட்டத்தை ஒத்திவைப்பது கூடாது' என்று ஓர் அவசரச் சட்டத்தையும் மறுநாளே கவர்னர் பிறப்பித்தார்.

அதன்படி பஞ்சாப் சட்டமன்றம் கூடி, நிதி அலுவல்களைக் கவனித்தது; 'கவர்னரின் உத்தரவுகள் -- அவசரச் சட்டப் பிரகடனம் ஆகியவை செல்லாது' என்று கூறி சபாநாயகர், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்; சபாநாயகர் கூற்றை 'சரி' என்று ஏற்று உயர் நீதிமன்றம், 'ஆளுநரின் சட்டப் பிரகடனம் செல்லாது' என்று தீர்ப்புக் கூறியது; இதன் விளைவாக, கருவூலத்திலிருந்து பணம் எடுக்க முடியாமல் -- அரசே செயலாற்றதாகிவிடும் நிலை ஏற்பட்டது; இதை எதிர்த்து அம்மாநில அரசு, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தது.

(1-ம் பத்தி பார்க்க)

பாபநாசம் வட்டச் செயல்வீரர்கள் கூட்டம்

"பாபநாசம் வட்ட தி.மு.க. செயலாளர்கள்—பிரதிநிதிகள்—ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டம் 28—11—72 காலை 11-மணியளவில் பாபநாசம் மகாலட்சுமி சினிமா தியேட்டரில் சமூகப் பொதுச்செயலாளர் ஈவலர் அவர்கள் தலைமையில் நடைபெறும்; மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்"

என்று வட்டச் செயலாளர் என். சமாதானன் அறிவிக்கிறார்.

வட ஆற்காடு மாவட்ட நூலக ஆணைக் குழு நேர்தல்

திமுக வட்டச் செயலாளர் வேண்டுகோள்

வட ஆற்காடு மாவட்ட நூலக ஆணைக் குழு உறுப்பினர் தேர்தல், 20—11—72 காலை 11 மணிக்கு நடைபெறுகிறது; செங்கம் ஊராட்சி ஒன்றிய தலைவர் கு. கிருட்டினன் கேட்பாளராகப் போட்டியிடுகிறார்; அவரை ஆதரிக்குமாறு செங்கம் வட்ட தி.மு.க. செயலாளர் எம். எஸ். இராகவ கிருட்டினன் எம்.எஸ் ஏ. கேட்டுக் கொள்கிறார்.

கல்வி உதவித்தொகை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

நவ 28 காலை: குடந்தை; முற்பகல் 11 மணி: பாபநாசம்; மாலை: 5 மணி: சூடாக்கை நகர மன்ற வரவேற்பு; 6 மணி: சூடாக்கை பொதுமக்கள் வரவேற்பு; இரவு 9 மணி: மாயவரம் — பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 29: தரைபூர்த் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வர்.

தமிழ்நாடு நூலகத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

நவ. 29 காலை 8 மணி: சேலம் அன்னதானப்பட்டி. — திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுதல்; 10 மணி: சேலம் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்; மாலை 6-30 மணி: ஓமலூர்; இரவு 8 மணி: தாரமங்கலம்.

உணவுத் துறை அமைச்சர்

ப. நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

நவ. 28 காலை 9 மணி: கும்பகோணம்; 11 மணி: பாபநாசம்; மாலை 5 மணி: கும்பகோணம்—நகர மன்ற வரவேற்பு; 6 மணி: சீனிவாசநல்லூர் மின் விளக்கு ஏற்று விழா (திருவிடமருதூர் ஊராட்சி ஒன்றியம்); இரவு 8-மணி: மாயூரம்—பொதுக்கூட்டம்.

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்தது)

ஒப்பந்த அறிவிப்பு
எண் /72-73

30" மின்விசிறிகளை மஞ்சூர்புரத்திலுள்ள திருச்சி வீட்டு வசதிப் பிரிவின் ஸ்டோரில் கொண்டுவந்து சட்ட செய்வதற்கு மூடி முத்திரை யிட்டு மேலுறையில் முறைப்படி குறிப்பிடப்பட்ட தனித்தனி விலை மதிப் பீடுகள் 20—12—1972 மாலை 3-00 மணிக்குள் கிடைக்கும்படியாக வரவேற்கப்படுகின்றன.

Items	Quantity to be supplied
Supplying of 30" sweep A.C. ceiling fan with regulator canopy one foot down rod etc.	700 Nos.
(The make should be specified)	

1. ஒவ்வொரு விலை மதிப்பீட்டுக்கும் (quotation) பொறுப்புத் தொகை யாக ரூ. 2,100-க்கு திருச்சி வீட்டு வசதிப் பிரிவு நிர்வாகப் பொறி யர் & நிர்வாக அதிகாரியின் பெயருக்கு ஒரு டிமாண்ட் டிராப்ட் அனுப்பிவைக்க வேண்டும். இந்த அலுவலகத்திலிருந்து தகவல் கொடுக்கப்படும்போது மேற்கொண்டு கூடுதல் பொறுப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.
2. சப்தி ஆர்டர் கிடைத்த தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் முழுவதும் சப்தி செய்யப்பட வேண்டும்.
3. மஞ்சூர்புரத்தில் உள்ள திருச்சி வீட்டு வசதிப் பிரிவு அலுவலகத்தின் சார்பில் செலுத்தப்பட வேண்டிய வரிகளையும் சேர்த்தே விலை விவிகம் குறிப்பிடப்பட வேண்டும்.
4. குறைந்தப்சம் ஓராண்டுக் காலத்துக்கு உத்திரவாதம் தரப்பட வேண்டும்.

எந்தவிதக் காரணமும் சொல்லாமல் விலை மதிப்பீடுகளை ஏற் கவோ, நிராகரிக்கவோ மேலுலையொப்பமிட்டுள்ளவருக்கு அதிகாரம் உண்டு.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு,
திருச்சிராப்பள்ளி-20,
தேதி: 18—11—1972

ஜி. என். சேஷாத்திரி,
நிர்வாகப் பொறியர் &
நிர்வாக அதிகாரி

பெரியார் கூட்டத்தில் காலிகள் வாலாட்டம்

சேலம், நவ. 27—

சேலம் நகரில் தி.மு. கழகச் சார்பில் ஒர் பொதுக்கூட்டம் நகராட்சி தி.மு.க. உறுப்பினர் எஸ். மெய்யப்பன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி பேசிக் கொண்டிருக்கையில், மேடையை நோக்கிக் கற்கள் வீசப்பட்டன. மேடையில் 2 கற்கள் வந்து விழுந்தன; யாருக்கும் காயம் ஏற்படவில்லை; அது போது தந்தை பெரியார் அவர்களும் மேடையில் உட்கார்ந்திருந்தார்.

தொடர்ந்து வீரமணி பேசுகையில் கல் வீச்சுக்குக் கண்டனம் தெரிவித்தார்.

தர்மபுரி மாவட்ட திராவிட முற்கத் தலைவர் எம். என். நம்பியார்; சேலம் நகராட்சி உறுப்பினர் மாரியப்பன், சேலம் மாவட்ட தி. மு. க. தலைச் செயலாளர் அன்புக்கரசு, செயராமன் எம்.எல்.ஏ. ஆகியோரும் பேசினர்.

இதுதியில் தந்தை பெரியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்ட தாவது :—

"மக்கள் ஒற்றுமையாக இருந்து முதலமைச்சர் கலைஞரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும்.

தாழ்ந்த நிலையில் உள்ள மக்களை உயர்த்த அவர் எவ திட்டங் களை நிறைவேற்றியிருக்கிறார். இடிந்து வீடாக மாறிவந்தித்தில் சுமூக நிலை திரும்பி வருகிறது.

'கிளர்ச்சி' என்ற பெயரால் நடக்கும் வன்முறை நடவடிக் கைகளுக்கும் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--11--72

மாயூரம்

நகர தி.மு.க. சார்பில் இரவு 8 மணிக்கு நகரம் பூங்காவில்; தலைவர்: கோ. இரத்தினவேலு; பேசுவோர்: அமைச்சர் நாவலர், அமைச்சர் மன்னை ப. நாராயண சாமி, என்.கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., டி. வி. சம்பத் எம்.எல்.ஏ., தபி தேவேந்திரன் எம்.எல்.ஏ., இரா. ஜோசப், என். வடிவேலு எம்.சி., எஸ். என். குருமூர்த்தி எம்.சி., அ. செங்குட்டுவன், ஈ. வேணு எம்.சி., பி. கிருஷ்ணமூர்த்தி, எம். அப்துல் ஹாதி, கே. எஸ். சண்முகம், திலீப் சிதம்பரம்.

திருவரங்கம்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சாத்தரை வீதியில்; தலைவர்: மு. இராமையா / சேசு வேர்: கோவை மு. இராமநாதன் எம்.எல்.ஏ., எம். எஸ். வெங்கடாசலம், ஜி. ஈராங்குசம் எம்.எல்.சி., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கு. காமாட்சி எம்.எல்.ஏ., எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், எஸ். ஏ. ஜி. ராபி, செல்வேந்திரன், எஸ். எம். வி. சாமி, எஸ். கே. பெரியசாமி மற்றும் பலர்.

சென்னை 8-வது வட்டம்

அன்பு கலைக் கழகச் சார்பில் இரவு 7 மணிக்கு இராயபுரம்—மணிமாத் தொட்டி அம்மன் கோவில் எதிரில்; தலைவர்: கு. இராமலிங்கம்; பேசுவோர்: கோவை செழியன், சு. இராமநாதன், இரா. மு. மனோகரன் எம்.சி., எம். சந்திரன் மற்றும் பலர்.

29--11--72

மாதவரம்

தி. மு. கழகம் மற்றும் சார்பு மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு மூலக்கடையில்; தலைவர்: ஆர். தன்சிங்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், திருப்பத்தூர் இராமமூர்த்தி, மா. வெ. நாராயணசாமி எம்.எல். ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.பி., மா. பொ. வேதாசலம், மா. மதுவாணன், ஏ. செயராசு. (மாதவரம் நகரியத்தின் சார்பில் அமைச்சர் மாதவன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்படும்; துப்புரவுத் தொழிலாளர் இல்லத்திற்கு அமைச்சர் மாதவன் அடிக்கல் நாட்டுவார்.)

வேலாயுதம்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கலியாணி திடலில்; தலைவர்: க. முருகதாசபாபி; பேசுவோர்: மு. இராசுகாந்தன் எம்.எல்.சி., வி. எம். வெங்கடாசலம், எஸ். ஏ. ஜி. ராபி, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி எம்.சி., டி. வேந்திரன், அ. குஞ்சையா, ஜெகதீசன் மற்றும் கழக மாணவர்கள்.

பிமநகர்—திருச்சி

4-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6.30 மணிக்கு மாரியம்மன் கோவில் திடலில்; தலைவர்: டி. எஸ். மணி; பேசுவோர்: தந்தை பெரியார், கி. வீரமணி எம். எஸ். வெங்கடாசலம், எஸ். ஏ. ஜி. ராபி, வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி எம்.சி., டி. வேந்திரன், அ. குஞ்சையா, ஜெகதீசன் மற்றும் கழக மாண வர்கள்.



'பரபரப்பு' ஏடுகளின் விஷமச் செய்தி

சென்னை மாவட்டச் செயலாளர் கண்டனம்

சென்னை, நவ. 27—

பரபரப்புச் செய்தித் தாள்கள் சில பரபரப்புச் செய்தித் தலைப்புக்காகவே வெளியிட்டுள்ள ஒரு அப்பட்டமான பொய்ச் செய்தியை மறுத்து, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் அறிவிப்பதாவது :—

"முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இல்லத்திற்கு நேற்று காலையில் சிலர் ஊர்வலமாக வந்து மனு கொடுத்தனரே தவிர, மனு கொடுக்கவந்த சகோதரன் என்னவரைக் கத்தியால் குத்த முயற்சி நடந்ததாக ஒரு சில மாலை மத்திரிகைகள் — மக்களிடம் பரபரப்பு உண்டாக்குவதற்காக—பொய்ச் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் செய்தி, தலைப்புக்காக வெளியிடப்பட்டதே தவிர, அதில் கடுகளவும் உண்மையும் இல்லை என்பதை அங்கேயே இருந்த நான் மட்டுமல்ல — முதலவர் வீட்டில் இருந்த வித்திரிகை நிருபர்களும் அறிவார்கள்.

ஒவ்வொரு தொகுதிக்கும் 1 000 பேர் ஊர்வலமாக வருவார்கள் — என்று முன்கூட்டியே அறிவித்துவிட்டு, 500 பேருக்காக நீண்ட நேரம் காத்திருந்து ஆட்களைச் சேர்த்துக்கொண்டு வரவேண்டிய நிலைமைக்கு ஆளாகி — இப்படி ஒவ்வொரு போராட்டத்திலும் தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவும் முறையில் ஏதாவது புதிய புதிய திடீர்ச் செய்திகளை வெளியிடுவது — அதன் மூலம் திருப்தியடைய நினைக்கிறார்கள்.

காலையில் முதலமைச்சர் இல்லத்திற்கு வந்த சகோதரன், எந்த நிலையில் வந்தார் என்பதை அனைவரும் கண்ணார்கள்.

எனக் கொடுக்க வந்தவர்கள் வேண்டுமென்றே தகராறை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, கலைஞர் வீட்டு வாயிலில், நின்றுகொண்டு, 'ஒழிக' கூச்சல் போட்டும்கூட, கழகத் தோழர்கள் அமைதியை காத்தனர்.

'இந்தப் போராட்டத்திலாவது ஏதாவது கலவரமாவது' என்று எங்கியவர்கள், ஏமாந்த நிலையில் வெளியிடும் இப்படியிப்பட செய்தி வெளியிட்டு அவர்களுக்கு எந்தவிதத்திலும் உதவி செய்யாது என்பதைச் சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்."

ஆசம்பாவிதம் ஏதும் இல்லை

சென்னைப் போலீசு கமிஷனர் அறிக்கை

சென்னை, நவ. 27—

ஒட்டுக் காங்கிரசும் — வலது கம்யூனிஸ்டுகளும், 'வாக்காளர் சேரணி' :என்ற பெயரில் நேற்று நடத்திய ஊர்வலம் மற்றும் சென்னை நகரப் போலீசுக் கமிஷனர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :—

"சென்னையில் நேற்று காலை பல்வேறு பகுதிகளிலிருந்தும் 50 முதல் 500 பேர் வரை ஊர் வலமாகவும் புறப்பட்டுச் சென்றனர்.

ஊர்வலத்தினர் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் இராநெடுஞ்செழியன், அன்பழகன், சத்தியவாணிமுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் இராமநாதன், அரங்கண்ணல், எஸ். ஆர். கண்ணன், வேதாசலம் ஆகியோர் வீடுகளுக்குச் சென்று மனுக் கொடுத்தனர்; அதன் பின் எல்லோரும் கலைந்து சென்றனர்.

ஊர்வலத்தினர் சென்ற வழிகளில் எல்லாம் பலத்த போலீசுக் காவல் மேற்கம்பட்டிருந்தது; பேலீசார் தொடர்ந்து ரோந்து சுற்றியும் வந்தார்கள்; எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. எல்லாம் அமைதியாக நடந்து முடிந்தது."

சேலம் மாவட்ட செயல் வீரர் கூட்டம்

"29—11—72 காலை 10 மணியளவில் சேலம் நியூ இம்பீரியல் தியேட்டரில், சேலம் மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறும்; கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை வகிப்பார்; அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்; அழைப்பிதழ் முடன் வருபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்"

என்று, மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.சி. அறிவிக்கிறார்.

செங்கம் வட்ட தி.மு.க. உறுப்பினர்களுக்கு :

"29—11—72 பிற்பகல் 2 மணியளவில், செங்கம் வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம், மாவட்ட தி.மு.க. செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ. முன்னிலையில் செங்கம் யூனியர் விடுதியில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாமல் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் எம். எஸ். இராதாகிருட்டினன் எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

நொச்சி முன்னேற்றக் கழகத்தினரை திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்கள் ஆயிரக்கணக்கில் வெளியிடுவ தாகவும், அதிலுள்ளவர் பெயர்களை, ஊரின் வரலாற்றை (24) பக்கமாகவும் சுமார் ரூபாய் இரண்டு (2) மட்டுமே விலை வைத்து வெளியிட்டுள்ளதாகவும் (பக்கம் 10) வர செய்தி வெளியிட்டுள்ளது.